## அரசு பாலிடெக்னிக்குகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் பணி

* 189 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அரசாங்க பாலிடெக்னிக்குகளில், 1968–69-ல் ஓய்வு பெற்றவர்களை மீண்டும் பணியாற்ற அரசு நியமித்திருக்கிறதா?

(இ) ஆம் என்றால், எத்தனை பேர்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. பா. சாரதி: தலைவரவர்களே, தமிழகத்திலிருக்கும் பாலிடெக்னிக்குகளில் இருக்கும் மாணவர்களுக்குத் தகுந்த முறையில் ஆசிரியர்கள் இல்லாமல் 250 மாணவர்கள் இருந்தால் 100 பேருக்கு மேல் ஆசிரியர்கள் இருக்கிறார்களே, இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எந்த பாலிடெக்னிக்கில் அப்படி இருக்கிறது என்று தெரியவில்லை. அதுபற்றிக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 190, 191 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

## பொள்ளாச்சி–1 ரக நிலக்கடலை.

* 192 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மை அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"பொள்ளாச்சி–1" ரக நிலக்கடலை அதிக அளவில் பயிரிட திட்டம் ஏதேனும் தற்போது அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி (டாக்டர்) சத்தியவாணிமுத்து: அரசு அண்மையில் ஒப்பளித்துள்ள நிலக்கடலை மூலவித்துக்கள் உற்பத்தித் திட்டத்தின் கீழ், தென்காசிக் கோட்டத்தில் 300 ஏக்கர் பரப்பிலும், குடுமியாமலையில் 400 ஏக்கர் பரப்பிலும் "பொள்ளாச்சி-1" ரக நிலக்கடலைப் பெருக்கப் பணியை வேளாண்மைத்துறை மேற்கொள்ளும்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த நிலக்கடலை ஒரு ஏக்கராவிற்கு எவ்வளவு விளைகிறது? இந்த நிலக்கடலையை மேலும் கோவை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம் தாலூக்காக்களில் அதிக அளவில் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?